

## காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி கிளை, வார்டு, பாக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்:

# 200 க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற காஞ்சிபுரம் மண்ணில் சபதம் ஏற்போம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை!

காஞ்சிபுரம்,செப்.11–

**காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிளை, வார்டு, பாக நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``கொள்கை உறுதிகொண்ட இளைஞர்களை இயக்கமாக்கி, அரசியல் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்த பேரறிஞர் அண்ணாவின் மண்ணில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய் வீட்டுக்கு வந்திருக்கும் உணர்வை ஏற்படுத்தியுள்ளது. கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 2026- சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெல்ல, கடமை-கண்ணியம்-கட்டுப்பாடுடன் அண்ணா வழியில் அயராது உழைப்போம்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சி மிக்க உரையின் விவரம் வருமாறு:**

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வட்டம் மற்றும் கிளை இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய இந்த நேரத்தில் என் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாட்டின் தலைமகன்

இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த இளைஞர் அணி தம்பிமார்களுக்கும், குறிப்பாக, மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சுந்தர் அவர்களுக்கும் மீண்டும் எனது பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மண்ணுக்கு எப்பொழுது வந்தாலும் ஒரு புதுவித உற்சாகம் ஏற்பட்டுவிடும். ஒரு புது தெம்பு ஏற்பட்டுவிடும். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய் வீடு என்றால் அது இந்த காஞ்சிபுரம் மாவட்டம்தான். தாய் வீட்டுக்கு வந்த அந்த பெருமையோடு, பூரிப்போடு உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் 100 சதவிகித வெற்றியைப் பெற்றோம். தமிழ்நாட்டில் 39, பாண்டிச்சேரி சேர்த்து 40 -க்கு 40 தொகுதிகளென, நம் தலைவருக்கு தமிழ்நாட்டு மக்கள் மிகப்பெரிய வெற்றியைத் தேடி தந்தார்கள். அந்த தேர்தலுக்கு முன்பு சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை நடத்தினோம். தலைவர் அவர்கள் அந்த அனுமதியை நமக்கு கொடுத்தார். உங்களில் பலபேர் அந்த மாநாட்டுக்கு வந்திருப்பீர்கள். அந்த மாநாட்டுக்குத் தயாராக, ஆறு மாதங்களுக்கு முன்பு, தமிழ்நாடு முழுவதும் செயல்வீரர் கூட்டங்களை நடத்தினோம். அப்போது, `முதல் செயல்வீரர்கள்' கூட்டத்தை இதே காஞ்சிபுரம் மாவட்டத்தில்தான் நாம் நடத்துகிறோம். இப்பொழுது அந்த நினைவுகள் எனக்கு மீண்டும் வந்திருக்கின்றன.

### காஞ்சிபுரம் அறிமுகக் கூட்டம்

2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு, இதே காஞ்சிபுரத்தில்தான் ஆரம்பித்தோம். இப்போது 2026 சட்டமன்ற தேர்தலுக்கு முன்பும் இதே காஞ்சிபுரத்தில்தான் ஆரம்பித்திருக்கிறோம். சட்டமன்றத் தேர்தலுக்கு உங்களை தயார்படுத்தவும், இளைஞர் அணி பணிகளை வேகப்படுத்தவும், சென்னைக்கு வெளியில் நடக்கிற முதல் அறிமுக கூட்டம் என்றால், அது இந்த காஞ்சிபுரம் அறிமுகக் கூட்டம்தான்.

பலமுறைநான்சொல்லி இருக்கிறேன். எத்தனையோ பொறுப்புகள் என்னைத் தேடி வந்திருக்கின்றன. எத்தனையோ பொறுப்புகள் வகித்துக் கொண்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத் துறை அமைச்சர், சிறப்புத் திட்ட செயலாக்க துறையின் அமைச்சர் இப்படி எத்தனையோ பொறுப்புகள் என்னை தேடி வந்தாலும், என்னுடைய மனதுக்கு எப்போதுமே ஒரு நெருங்கிய பொறுப்பு, நெகிழ்ச்சியைத் தரக்கூடிய பொறுப்பு என்றால் அது நம் கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் என்ற பொறுப்புதான். அதற்கு மேல் எதுவுமே கிடையாது.

இன்று பல்வேறு நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டாலும் இன்றைக்கு மட்டுமே இது எட்டாவது நிகழ்ச்சி. காலையில் 9 மணிக்கு ஆரம்பித்து, பல்வேறு நிகழ்ச்சிகள். அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகள், ஆய்வுக் கூட்டங்கள், இளைஞர் அணியின் நூலக திறப்பு விழா, இப்படி எவ்வளவோ நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களையும், கழகத்தினரையும் சந்தித்தாலும், இந்த இளைஞர் அணி நிகழ்ச்சிக்கு வந்து இளைஞர் அணி தம்பிமார்கள் உங்களை பார்க்கும்போது என்னுடைய குடும்பத்தில் இருக்கக்கூடிய என்னுடைய சொந்த அண்ணனையும், தம்பியையும் பார்க்கின்ற உணர்வு எப்பொழுதுமே ஏற்படும். அந்த நெகிழ்ச்சியோடுதான் இன்றைக்கு உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.

### தனித்தனியாக புகைப்படம்

தலைவர் அவர்கள் சமீபத்தில் குறிப்பிட்டார். நான் பேசுவதை விட, களத்தில் இறங்கி செயலில் காட்டுவது அதிகம் விரும்புவன் நான் என்று தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார். நானும் பேசுவதைக் கொஞ்சம் குறைத்துவிட்டு களத்தில் இறங்கி பணிகள் மேற்கொள்ள போகிறேன். ஆனால், எனக்கு இன்னொரு ஆசை இருக்கிறது. அந்த ஆசையை, நீங்கள் நிறைவேற்றி கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நான் பேசி முடிந்தபிறகு, உங்கள் அத்தனைபேரோடும் தனித்தனியாக புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசை இருக்கிறது. அதற்கு நீங்கள் ஒத்துழைத்தீர்கள் என்றால், அமைதியான முறையில் வரவேண்டும். அதனால், என் பேச்சைக் குறைத்துவிட்டு, உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து தனித்தனியாக புகைப்படம் எடுத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பை எனக்குத் தருமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

### இயக்கத்துக்குப் பெருமை

இந்த இளைஞர் அணி பொறுப்பு எவ்வளவு முக்கியமான பொறுப்பு என்பதை நீங்கள் உணர வேண்டும். இந்த அணி எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் உணர வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு காலையில் தான் `முரசொலி'யில இந்த மாவட்டத்திற்கான அறிவிப்பு வந்தது. காலையில் முரசொலியில் அறிவித்து, சாயங்காலம் அந்த மாவட்டத்தில் அறிமுக கூட்டம் நடத்துகிறோம் என்றால், அந்த அளவுக்கு இளைஞர் அணி, வேகமாக செயல்படுகிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எந்த இயக்கத்துக்கும் இந்த பெருமை இருக்காது.

இளைஞர் அணிக்கு என்று ஒரு தனி வரலாறு உண்டு. அதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு இயக்கங்கள், ஏன் அனைத்து இயக்கங்களும் பல அணிகளை துவங்குகிறார்கள். முக்கியமாக இளைஞர் அணி துவங்குகிறார்கள். ஆனால், இந்தியாவிலேயே முதன்முறையா இளைஞர் அணி துவங்கிய இயக்கம், நம் திராவிட முன்னேற்ற கழகம்தான். அதை துவக்கியது நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள்தான் துவங்கினார்.



### இயக்கத்தின் ஆலமரம்

கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க என்று ஆரம்பித்தார். நம் தலைவர் போட்ட விதை. 1980-ஆம் ஆண்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் அது செடியாக முளைத்தது. இன்றைக்கு நம் தலைவரின் உழைப்பால், உங்களின் ஒத்துழைப்பால் இன்றைக்கு இளைஞர் அணி என்பது இயக்கத்தின் ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. இன்னும் பெருமையாக சொல்ல வேண்டுமென்றால் கழகத்தில் 25 அணிகள் இருக்கின்றன். ஆனால், கலைஞர் அவர்களால் பலமுறை கழகத்தின் 25 அணிகளில் முதன்மை அணி என்றால், அது இளைஞர் அணி என்று கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட அணி நம் இளைஞர் அணிதான். ஆகவே, இப்படிப்பட்ட இளைஞர் அணியில் நாம் இன்றைக்குப் பொறுப்புக்கு வந்திருப்பது நமக்கெல்லாம் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை.

இங்கு இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள் வருகை தந்து, நிகழ்ச்சி சிறப்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு இளைஞர் அணி இவ்வளவு பெரிய வளர்ச்சி அடைந்து நிற்கிறது என்றால், அதற்கு மாவட்ட, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள் அவர்களின் ஒத்துழைப்பும், அன்பும், ஆதரவும் மிக மிக முக்கியம். அதுவும் ஒரு மிக முக்கிய காரணம்.

இன்றைக்கு இந்தியாவில் பல கட்சிகள் பூத் கமிட்டி அமைப்பதற்கே தடுமாற்றம் அடைந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால், நம் இளைஞர் அணி இன்றைக்கு பூத்துக்கு ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை நியமித்து, நாம் சாதனை படைத்திருக்கிறோம். புதிதாக பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு தைரியமாகச் சொல்லலாம். நான் தி.மு.க-வில் இளைஞர் அணியில் ஒரு நிர்வாகி என்று. நீங்கள் அத்தனை பேரும் முழுக்க முழுக்க உங்களின் சொந்த உழைப்பினால் இந்த பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். ஒரேயொரு பரிந்துரையை மட்டுமே கருத்தில் கொண்டு உங்களுக்கு இந்த பொறுப்பு வழங்கப்படவில்லை.

### அடையாள அட்டை

முதலில் மாவட்டக் கழகத்திலிருந்து பகுதி, வட்ட, செயலாளர்களிடமிருந்து பரிந்துரை வாங்கினோம். ஆனால் அதை மட்டுமே வைத்து இந்த பொறுப்பு அறிவிக்கப்படவில்லை. அன்பகத்திலிருந்து உங்களை சரிபார்க் தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்ட அத்தனை நபர்களுக்கும் தனித்தனியாக, நேரடியாக அலைபேசியில் தொடர்புகொண்டு பேசினோம். அதில் உங்களின் பின்னணி, உங்களின் குடும்பப் பின்னணி என்ன, உங்களின் கழகக் கொள்கை பற்று என்ன, கழக உணர்வு என்ன, என்னென்ன நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளீர்கள், என்னென்ன போராட்டத்தில் கலந்திருக்கிறீர்கள், உங்களின் சமூக வலைதள அறிவு எவ்வளவு, எல்லாத்தையும் சரிபார்த்து இருக்கிறோம்.

உங்களின் விருப்பம், ஆர்வம் எல்லாத்தையும் உங்களிடம் தனித்தனியாகக் கேட்டு அறிந்திருக்கிறோம். தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் நேரடியாக கலந்து கொள்கிற வகையில், உங்கள் ஒவ்வொருவரின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை கொடுக்கப்பட்டு, இந்த நிகழ்ச்சியில் உட்கார்ந்து இருக்கிறீர்கள். இப்படி பல்வேறு கட்டங்களை தாண்டி இன்றைக்கு இந்த பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.

தலைவர் எப்பவுமே சொல்வார். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பதவி கிடையாது, பொறுப்பு. அந்தப் பொறுப்பை நீங்கள் உணர்ந்து தினந்தோறும் பொறுப்போடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இளைஞர் அணியில் நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால், உங்களுக்கான அங்கீகாரம் உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும். அதற்கு சிறந்த உதாரணம் இங்க இருக்கக்கூடிய இந்த மேடை. இந்த மேடைதான் அதற்கு அடையாளம்.

இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்து, இன்றைக்கு மாவட்டச் செயலாளராக பொறுப்பேற்று, சட்டமன்ற உறுப்பினராக, மாண்புமிகு அமைச்சராக இங்கே அமர்ந்திருக்கிறார். உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வம் அவர்கள். ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளராக பணியாற்றியவர். இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி நாடாளுமன்ற உறுப்பினராக அலங்கரித்துக் கொண்டிருக்கிறார். உங்களின் குரலாக இன்றைக்கு டெல்லியில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறார். உங்களின் மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர் அப்துல் மாலிக். மாவட்டத் துணை அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டு, தலைவர் அவர்களால் மாவட்டப் அமைப்பாளராக உயர்த்தப்பட்டவர். இன்றைக்கு மாநிலத்தின் துணை செயலாளராக எனக்கு தோலோடு, தோல் நின்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

இளைஞர் அணியின் இந்த மண்டலத்துக்கான பொறுப்பாளர் சகோதரர் பிரபு கஜேந்திரன் இங்கே வந்திருக்கிறார். ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டத்திற்கான மாவட்டத் துணை அமைப்பாளராக செயல்பட்டு, மாவட்ட அமைப்பாளராக தலைவர் அவர்களால் உயர்த்தப்பட்டவர் பிரபு அவர்கள். தலைவரின் கண்டுபிடிப்பு பிரபு. அதுமட்டுமல்ல, இரண்டு முறை மாவட்ட அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டதால், நம் தலைவர் அவர்கள் பிரபு அவர்களை மாநிலத் துணைச் செயலாளராக இன்றைக்கு உயர்த்தியுள்ளார்கள்.

இன்றைக்கு சகோதரர் பிரபு கஜேந்திரன் அவர்கள் இந்த மண்டலத்தில் அனைத்து இளைஞர் அணி பணிகளையும் மிகச்சிறப்பாக நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்.

உங்களின் மாவட்ட அமைப்பாளர் சகோதரர் யுவராஜ் அவர்கள். நகர இளைஞர் அணி அமைப்பாளராக, இரண்டு முறை மாவட்ட துணை அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டவர். அவரின் உழைப்பு இன்றைக்கு அவரை மாவட்ட அமைப்பாளராக உயர்த்தி இருக்கிறது. இன்னும் பல உதாரணங்கள் இருக்கின்றன்.

வாலாஜாபாத் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அண்ணன் பி.எம் பாபு அவர்கள் இங்கே வந்திருக்கிறார். அவரும் இளைஞர் அணியில்தான் தன் கழகப் பணியை முதலில் துவங்கி இருக்கிறார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றி, இன்றைக்கு ஒன்றிய கழகச் செயலாளராக சிறப்பாக உயர்ந்து நிற்கிறார். இப்படி இந்த காஞ்சிபுரம் மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுக்க இருக்கக்கூடிய அனைத்து மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதிக் கழக செயலாளர்களாக வந்தவர்கள் எல்லாம் இளைஞர் அணியிலிருந்து பயிற்சி எடுத்துக் கொண்டு வந்தவர்கள்தான்.

### பெருமை வாய்ந்த அணி

ஒரு முக்கியமான கிரிக்கெட் விளையாட போகிறோம் என்றால், அதற்கு முன்பு பயிற்சி முக்கியம். நாம் மக்கள் பணியாற்றுவதற்கு நம் இளைஞர் அணி என்பது மிக மிக முக்கியமான பயிற்சி செய்யக்கூடிய இடம்தான் நம் இளைஞர் அணி பணி என்பதை நீங்கள் உணர வேண்டும். இன்றைக்கு கழகத்தில் மட்டுமல்ல அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகளாக வணக்கத்திற்குரிய மேயர்களாக, நம் இளைஞர் அணியில் பணியாற்றி விட்டு இன்றைக்கு பல பேர் அந்த வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால் நம் கழகத்திற்கு தலைவரையும், தமிழ்நாட்டுக்கு முதலமைச்சரையும் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சொன்னால், அது மிகையாகாது. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அணிக்கு நீங்கள் இன்றைக்கு வந்திருக்கிறீர்கள்.

நீங்கள் உழைக்க தயாராக இருந்தால், தலைவர் உங்களை உயர்த்த என்றைக்கும் தயங்க மாட்டார். நிச்சயமாக உங்களை உயர்த்தி காட்டுவார். இன்றைக்கு மேடைக்கு கீழ் அமர்ந்திருக்கிற நீங்கள், உங்களின் உழைப்பால் வெகு விரைவில் மேடைக்கு மேல் வருகின்ற காலம் ரொம்ப தூரம் இல்லை. அதற்கான தகுதியை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கான வாய்ப்பாக இந்த இளைஞர் அணி பொறுப்பை நீங்கள் நினைக்க வேண்டும்.

தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின், முத்தமிழறிஞர் கலைஞரின் கொள்கை பேரன்கள். நம் இளைஞர் அணி கூட்டம் என்பதை நீங்கள் உணர வேண்டும். கொள்கை மிக மிக முக்கியம். அன்றாட அரசியலை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு நிர்வாகியும் குறைந்தது 50 லிருந்து 60 வாக்காளர்களை உங்களின் கட்டுப்பாட்டில் வைத்து, நீங்கள் சொல்கின்ற சின்னத்தில் வாக்களிக்கிறார்கள், 50 அல்லது 60 வாக்கு உங்களின் பொறுப்பில் இருந்தது என்றால், உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. அதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்களோடு நெருங்கி பழகுவதற்கான வாய்ப்பாக இந்த இளைஞர் அணி பொறுப்பை நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். தினமும் மக்களை சந்தியுங்கள். உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய இளைஞர்களைச் சந்தியுங்கள். அவர்களிடம் அரசியல் பேசுங்கள். விவாதமானாலும் பரவாயில்லை, உங்களின் கருத்துகளை எடுத்து வையுங்கள்.

நீங்கள் எந்த பணியை செய்தாலும் தயவு செய்து, அதை மாவட்ட, பகுதி, அமைப்பாளர்களிடம் சொல்லிவிட்டு, அவர்களிடம் அனுமதி வாங்கிட்டு, ஆலோசனை பெற்று அதை செய்யுங்கள். களத்தில் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறீர்களோ, அதேமாதிரி சமூக வலைதளத்திலும் சிறப்பாக செயல்படுங்கள். அன்பகத்திலிருந்து, உங்களுக்குத் தொடர்ந்து நீங்கள் பதிவு செய்ய வேண்டிய கார்டுகள், செய்திகள் வரும். அதை முதலில் படித்து பாருங்கள். படித்துவிட்டு அதை பதிவு செய்யுங்கள்.

### முரசொலியில் கடைசி பக்கம்

தலைவரின் பக்கம், பேஸ்புக் பக்கம், எக்ஸ் பக்கங்களை பின்தொடருங்கள். அதை முடிந்தவரை பகிருங்கள். இளைஞர் அணி பக்கத்தை பின்தொடருங்கள். உங்கள் மாவட்டச் செயலாளர் பக்கத்தை பின்தொடருங்கள். காலையில் எழுந்தவுடன் முரசொலி பத்திரிகையை படித்துவிடுங்கள். முரசொலியில கடைசி பக்கம் தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு என்று கொடுத்திருக்கிறார். எந்த அணிக்கும் இந்த பெருமை கிடையாது. முரசொலியில் இளைஞர் அணிக்கு என்று தனி பக்கம் இருக்கிறது. அந்த பக்கத்துக்கு பெயர் பாசறை பக்கம், கடைசி பக்கம். படிப்பதற்கு மிக மிக சுலபமாக இருக்கும். சின்ன சின்ன துணுக்குகள், சின்ன சின்ன செய்திகள், கார்ட்டூன்கள் என தயவுசெய்து அந்தப் பக்கத்தைப் படியுங்கள். தலைவரின் அறிக்கையை தினசரி படித்துவிடுங்கள்.

செய்தித்தாளில் படிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, இன்றைக்கு தினசரி முரசொலி நாளிதழ் வாட்ஸ் ஆப்பிலேயே வந்துவிடுகிறது. அதை படித்துவிடுங்கள்.

இன்னொரு கோரிக்கை. இங்கு பகுதி, வட்ட, ஒன்றிய செயலாளர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். உங்களிடம் என் அன்பு வேண்டுகோள். இன்றைக்கு புதிதாக பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய நம் தம்பிகளுக்கு அத்தனை பேருக்கும் பெரிதாக அரசியல் அனுபவம் இருக்காது. சில பேர் முதல் தலைமுறை அரசியல்வாதியாக வந்திருப்பார்கள். வட்டக் கழக, ஒன்றிய செயலாளர்களிடம் நான் வைக்கிற வேண்டுகோள். தயவுசெய்து இளைஞர் அணி தம்பிமார்கள் தெரிந்தோ, தெரியாமலோ சின்ன சின்ன தவறுகள் செய்தார்கள் என்றால், நெறிமுறை தெரியாமல் நடந்துகொண்டார்கள் என்றால் அவர்களை தயவுசெய்து தண்டித்து, புறக்கணித்துவிடாதீர்கள். அவர்களின் கைகளைப் பிடித்து நீங்கள் வழி நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க நகர, பேரூர், வார்டுகள், ஊராட்சி கிளைகள் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிவிப்பு விரைவில் வரவிருக்கின்றது. இதன் மூலமாக இன்னும் நான்கு மாதங்களில் இளைஞர் அணியில் நிர்வாகிகள் மட்டும் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பேர் நியமிக்க இருக்கின்றோம். இந்தியாவில் எந்த அணிக்கும் இப்படிப்பட்ட பெருமை கிடையாது. இந்த ஐந்து லட்சம் பேர் ஒவ்வொருத்தரும் ஒரு பத்து வாக்கு நான் பொறுப்பு எடுத்துக் கொண்டு வருகிறேன் என்று களத்தில் இறங்கி பணி செய்தார்கள் என்றால், கிட்டத்தட்ட 50 லட்சம் வாக்குகள் இந்த தேர்தலின் வெற்றியை தீர்மானிக்கக்கூடிய மையப்புள்ளியாக இருக்கபோவது இளைஞர் அணி தம்பிமார்கள் என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

### இயக்க வரலாறு

நம் இயக்கத்துக்குதான் வரலாறு இருக்கிறது. நம் இயக்கத்துக்குதான் கொள்கை இருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் நம் தமிழ்நாட்டு மக்களுக்காக என்னென்ன தியாகம் செய்திருக்கிறது. என்னென்ன போராட்டங்கள் செய்திருக்கிறது. நம் மொழிக்காக, நம் இனத்திற்காக, நம் மாநில உரிமைக்காக என்னென்ன பண்ணி இருக்கிறது என்பதைப் படித்து தெரிந்துகொள்ளுங்கள். அதை மக்களிடம் கொண்டு போய் பேசுங்கள்.

இன்றைக்கு இளைஞர் அணி சார்பாக களத்தில் மட்டுமல்ல, கருத்தியல் ரீதியாகவும் பல பணிகளை நாம் செய்துகொண்டு இருக்கிறோம். சட்டமன்ற தொகுதிதோறும் தலைவர் அவர்கள் ஆணையிட்டார்கள். இளைஞர் அணிக்கு ஒரு முக்கிய பணி கொடுத்தார்கள்.

### 200 இளம் பேச்சாளர்கள்

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை இளைஞர் அணி திறக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த பணிகளை எல்லாம் நாம் தொடங்கினோம். இன்றைக்கு 234 தொகுதிகளில் கிட்டத்தட்ட 100 தொகுதிகளுக்கு மேல் நம் இளைஞர் அணியின் நூலகம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இன்றைக்கு காஞ்சிபுரத்தில் இளைஞர் அணி சார்பாக அந்த நூலகத்தை திறந்து இருக்கிறோம்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தலைவர் ஆணையிட்டார்கள். சிறந்த இளம் 100 பேச்சாளர்களை பேச்சுப் போட்டி நடத்தி இளைஞர் அணி கொடுக்க வேண்டும் என்றுச் சொன்னார்கள். தமிழ்நாடு முழுக்க இளைஞர் அணி தம்பிமார்கள் பேச்சு போட்டி நடத்தினோம். இன்றைக்கு 100 இல்லை 200 இளம் பேச்சாளர்களை தேர்வு செய்து தலைமையிடம் ஒப்படைத்திருக்கிறோம்.

அந்த 200 இளம் பேச்சாளர்களும் இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க பயணம் செய்து சிறப்பாக பேசி வருகிறார்கள். இளைஞர் அணி சார்பாக, முத்தமிழறிஞர் பதிப்பகம் என்று ஒரு பதிப்பகம் ஆரம்பித்திருக்கிறோம். முத்தமிழறிஞர் பதிப்பகம் ஆரம்பித்து, இன்றைக்கு கிட்டத்தட்ட 25 புத்தகங்களை நாம் வெளியிட்டிருக்கிறோம். புத்தகங்கள் அனைத்தும் கொள்கை சார்ந்த, அரசியல் சார்ந்த நம் அரசின் சாதனைகள் சார்ந்த புத்தகங்கள், மிக மிக முக்கியமான முன்னெடுப்பாக வருங்கால பத்திரிக்கையாளர்கள் உருவாக்க, கலைஞர் மாணவர் பத்திரிக்கையாளர் திட்டத்தை இளைஞர் அணி சார்பாக துவங்கி இருக்கின்றோம்.

இந்தப் பணிகளை எல்லாம் மக்களிடம் கொண்டு போய் சேருங்கள். குறிப்பாக இளைஞர்களிடம் நீங்கள் கொண்டு சேர்த்து, பேச வேண்டும்.

நம்மிடம் கொள்கைகள் இருக்கிறது. திராவிட மாடல் அரசின் சாதனைகள் பல இருக்கின்றன. இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசை ஒட்டுமொத்த இந்தியாவில் இருக்கிற அனைவரும் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். மற்ற மாநில அமைச்சர்கள் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

நம் தமிழ்நாட்டின் வளர்ச்சியை பார்த்து, நம் பணிகளை எல்லாம் பார்த்து ஒன்றிய அரசு எப்படியாவது தமிழ்நாடு அரசை முடக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால், இதையெல்லாம் எதிர்த்து குரல் கொடுக்கக்கூடிய இந்தியாவிலேயே ஒரே தலைவர் நம் தலைவர் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் நாளுக்கு நாள் வலிமையாகிகொண்டே போகிறோம். நம் கூட்டணியை பார்த்து, இன்றைக்கு அ.தி.மு.க-வும் - பா.ஜ.க-வும் இருக்கிறாங்க குறிப்பா எதிர்கட்சி தலைவர் வயிற்றெரிச்சலில் இருக்கிறார்கள்.

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மிகவும் பதற்றத்துடன் இருக்கிறார். அ.தி.மு.க-வை, பா.ஜ.க இன்று துண்டுத் துண்டாக நறுக்கி விழுங்கிக்கொண்டு இருக்கிறது. மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்று எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்துக்கொண்டிருக்கிறார். முதலில் அ.தி.மு.க-வை அவர் பா.ஜ.க-விடமிருந்து மீட்க வேண்டும். மீண்டும் ஒருமுறை அ.தி.மு.க ஆட்சி வந்தது என்றால் பா.ஜ.க-வின் கட்டுப்பாட்டில்தான் அந்த ஆட்சி இருக்கும்.

தமிழ்நாட்டுக்குள் இந்தி திணிப்பு வரும், தமிழ்நாட்டுக்குள் குலக்கல்வி திட்டம் வரும், தேசிய கல்விக் கொள்கை வரும், தொகுதி மறுவரையறை வரும். நம் மாநில உரிமைகள் அத்தனையும் பறிக்கப்படும். இவையெல்லாம் நடக்கக்கூடாது என்றால் இளைஞர் அணி தம்பிமார்கள் அடுத்த 6 மாதம் ஒவ்வொரு நொடியும் களப்பணியாற்ற வேண்டும்.

### 200 தொகுதிகளில் வெற்றி

நம் தலைவர் அவர்கள் 200 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று சொல்லியிருக்கிறார். நாம் அத்தனைப்பேரும் களத்தில் இறங்கி, மக்களை சந்தித்து பிரச்சாரத்தை மேற்கொண்டேம் என்றால், 200 இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். 200 க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும் என்றால், அதற்கு தொடக்கமாக காஞ்சிபுரம் தொகுதியில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற்று காட்ட வேண்டும். அந்த உறுதிமொழியை நீங்கள் இன்று ஏற்றுக்கொள்ள வேண்டும். தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் தொடர்ந்து அமர வேண்டும் என்றால், கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், இங்கு வந்திருக்கின்ற அத்தனைப்பேரும் அந்த சபதத்தை ஏற்போம். எனவே, அந்த உறுதியை ஏற்றுக்கொண்டு வட்ட, கிளை மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உட்பட வந்திருக்கின்ற அத்தனை பேரின், இளைஞர் அணி பணிகளும், கழகப் பணிகளும், தேர்தல் பணிகளும் சிறப்பாக அமைய வேண்டும் என்றுக் கூறிக்கொண்டு, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சிமிகு உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்,. மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் பி.எம்.குமார், பி.எம்.பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் திலகர், சந்துரு, தசரதன், வெங்கடேசன், மாவட்ட அவைத் தலைவர் இனியரசு, கழக செய்தித் தொடர்புக் குழு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்.எஸ்.சுகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சுகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணி, பால்ராஜ், ஆட்டோ சிரில்ராஜ், சஞ்சய் காந்தி, யுவராஜ், அருள்முருகன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், சிலம்புச்செல்வன், கார்த்தி, குணசேகரன், நந்தா (எ) விநாயகமூர்த்தி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் லோகுதாஸ், கார்த்திகேயன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சந்தீப், பார்த்திபன், அருள் பெருமாள், வேல்முருகன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.